[1974 சனவரி 21

(இ) அரிசன நல இல்லங்களுக்கு கட்டடங்கள் கட்ட இந்தியன் வங்கியிலிருந்து ஒரு கோடி ரூபாய் கடனாகப் பெற அரசு முடிவு செய்தது. இக்கடன் தொகையை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நேரடியாக வங்கியிலிருந்து பெற்று இல்லங்களுக்கு கட்டடங்கள் கட்ட ஒரு திட்டம் வகுத்து இந்தியன் வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. வங்கியிலிருந்து கடன் கிடைத்த உடன் வீட்டு வசதி வாரியம் மேற்படி திட்டத்தை செயல்படுத்தும். மாநிலத்தில் மொத்தம் சுமார் 8,300 தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைஜாதி மாணவ மாணவியருக்குக் கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, உத்தேசிக்கப்பட்டிருக்கக்கூடிய கட்டடங்களை எந்த அடிப் படையிலே அரசாங்கம் கட்ட இருக்கிறது. திருச்சி மாவட்டத் திற்கு இதிலே முன்னுரிமை தரப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டிதரப்படும் என்று கூறினேன். மாநிலம் பூராவிலும் என்கின்றபோது திருச்சியும் அடங்கியிருக்க வேண்டும்.

* 40 வினா—**திரு. செ. சதாசிவம்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், பொன்பரப்பி கிராமத்தில் 1973-74-ல் அரிசன மாணவர் விடுதிகளுக்கு கட்டடங் கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திருச்சிராப் பள்ளி மாவட்டம், பொன்பரப்பியிலுள்ள தாழ்த்தப்பட்டோருக் காக அரசினர் மாணவர் இல்லத்திற்கு கட்டடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, சில ஆண்டு களாகவே அங்கு போதுமான கட்டடங்கள் சரியான வாடகைக் குக் கிடைக்கவில்லை. ஆகவே இது எப்பொழுது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

1974 சனவரி 21]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் சற்று முன்னாலே கூறியபடி இந்தியன் வங்கியிலே கடன் உதவிபெற்றுக் தான் இந்த ஹாஸ்டலும் கட்டப்படுகிற செயற்குறிப்பு இருக் கிறது. கடன் உதவி பெற்றவுடன் இதுவும் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

* 41 **வினா—திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ரெங்கசமுத்திரம் உயர்நிலைப் பள்ளிக்கு நலத்துறை மூலமாக ஹாஸ்டல் ஏற்படுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) மதுரை மாவட்டம், ரெங்கசமுத்திரத்தில் ஒரு தாழ்த்தப்பட்டோர் அரசினர் மாணவர் இல்லம் கல்வி ஆண்டு 1973–74-ல் துவக்க ஏற்கெனவே ஆணை விடுக்கப்பட்டுள்ளது.

குடகனாறு திட்டம்

* 42 வினா—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்,**
திரு. என். கிட்டப்பா,
திரு. பெ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடகனாறு திட்டத்தில் ஆக்கப்பணிகள் தொடங்கி விட்டனவா ?

(இ) அரவக்குறிச்சி தொகுதி ஆண்டிப்பட்டி மஞ்சைவெளி கிராமப் பகுதிக்கு இத்திட்டத்திலிருந்து பாசன வசதி செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) குடகனாறுத் திட்டத்தினால் அரவங்குறிச்சித் தொகுதியில் பெரிய மஞ்சுவெளி கிராமம் மட்டும்தான் பயனடை யும். ஆண்டிப்பட்டிக் கிராமம் இத்திட்டத்தினால் பயனடை யாது.